**உயர்கல்வி (இ1)த்துறை**

**கடிதம் ( 1 டி) எண். 174, நாள். 29.6.2012**

அனுப்புநர்
முனைவர் .தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ),
சென்னை–6.

அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வி– சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – 2013–2014–ஆம் கல்வியாண்டில் புதிதாக கல்லூரி துவங்க விண்ணப்பங்கள் வழங்குதல் மற்றும் சமர்ப்பித்தல் – கடைசி நாள் நிர்ணயம் செய்தல் – ஆணைகள் –வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசு கடிதம் (2டி) எண். 139, உயர் கல்வித்(இ1) துறை, நாள்.29.7.2011.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.60060/ஆர்1/2012, நாள்.15.6.2012.

-----

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. 2012 – 2013 –ஆம் கல்வியாண்டில் புதிதாக சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குவதற்கான விண்ணப்பங்களை வழங்குவதற்கும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கும் கடைசி நாள் **31.12.2011** என்று நிர்ணயம் செய்து பார்வை ஒன்றில் காணும் அரசுக் கடிதத்தில் ஆணையிடப்பட்டது.

3. இந்நிலையில், 2013–2014–ஆம் கல்வியாண்டில் புதிதாக சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க கல்வி முகமையினர் நேரிலும், தொலைபேசி வழியாகவும் விண்ணப்பங்களை வழங்கக் கோரி வருகின்றனர் எனவும், எனவே, 2013–2014–ஆம் கல்வியாண்டிற்கு புதிதாக கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்க விண்ணப்பங்கள் வழங்குவது தொடர்பாக அரசின் ஆணையை வழங்குமாறு பார்வை இரண்டில் காணும் தங்களின் கடிதத்தில் அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

4. தங்களின் மேற்காண் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில், 2013–2014–ஆம் கல்வியாண்டில் புதிதாக சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கான விண்ணப்பங்கள் வழங்குவதற்கும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் சமர்ப்பிப்பதற்கும் கடைசி நாள் 31.12.2012 என நிர்ணயிக்கலாம் என முடிவு செய்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இ.கோ / உதிரி.